தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2040, ஆனி 11

2009 ஜூன் 25, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். (உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்).

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

21—

கட்டடம்

***49149—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, வளத்தி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த வளத்தி ஒழுங்குமுறை விற்பனைக்கூட உபயோகத்திற்காகப் புதிய இடத்தில் தேவையான அலுவலகக் கட்டடம், ஏலக் கொட்டகை, சுற்றுச்சுவர் உட்பட ரூ.14.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட வளத்தி என்ற கிராமத்தைச் சுற்றிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் உழவுத் தொழிலை நம்பி வாழக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அங்கேயுள்ள விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை என்ற ஒரு ஏக்கமும் இருக்கிறது. அதேநேரத்தில், உற்பத்தி செய்யக்கூடிய காய்கறி, பழங்கள் முதலியவற்றைப் பதப்படுத்துவதற்குண்டான வசதியும் வாய்ப்பும் இல்லையென்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்காக ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அப்பகுதியில் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளத்தி என்ற கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இருக்கிறது. இருக்கிற இடத்திலே அலுவலகக் கட்டடம் தேவைப்பட்டது; ஏலக் கொட்டகை தேவைப்பட்டது; சுற்றுச்சுவர் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையெல்லாம் வந்ததை ஏற்று, கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. அடுத்து, பரிவர்த்தனைக் கூடம் ஒன்று கட்டப்படவேண்டுமென்று அரசு பரிசீலனை செய்து, 26 இலட்சம் ரூபாயில் நடப்பாண்டில் கட்டப்படவும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அங்கே நியாயமான விலை கிடைக்கவில்லை என்ற புகார் அரசுக்கு

2009 ஜூன் 25]

வரவில்லை. இன்னொன்று, குளிர்பதனக் கிடங்கு அங்கு அமைக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை; கோரிக்கை வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

22—

தடுப்பணை

***57616—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் வட்டம், வடபொன்பரப்பி அருகே முசுகுந்தா நதியின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், கொடியனூர் கிராமத்தில் முசுகுந்தா ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்திற்காக ரூ.1,212.60 இலட்சத்திற்கு 2008-2009-ல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயலாக்குவதற்காக 49.51 ஏக்கர் புன்செய் பட்டா நிலங்களும், 16.05 ஏக்கர் வன நிலங்களும் கையகப்படுத்தப்பட வேண்டும். இந்த இரண்டுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவும், வனத் துறையின் ஒத்திசைவும் தேவைப்படுகிறது. அவை கிடைத்த பிறகு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அரசுக்குக் கடிதத்தை அனுப்புவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முசுகுந்தா நதியானது, கல்வராயன் மலையிலே உற்பத்தியாகி, சங்கராபுரம் தொகுதியிலே தொடங்கி, என்னுடைய ரிஷிவந்தியம் தொகுதியிலே பெண்ணையாற்றிலே சேர்ந்து கடலிலே கலக்கின்றது.